SC.No. 138/2018
PW – 3
30.05.2025
பெயர் : மாரிகண்ணு
த/பெ. : செல்வம்

**குறுக்கு விசாரணை**

எனது வீட்டிற்கு முன்பாக தெரு உள்ளதா என்று கேட்டால் முன்பு இருந்தது தற்போது இல்லை. தெரு என்பது பொது மக்கள் வந்து செல்லும் பாதை என்று சொன்னால் சரிதான். எனது வீட்டிற்கு எதிராக உள்ள பாதையை மூன்று வீட்டுக்காரர்கள் மட்டும் பயன்படுத்தி வருகிறோம். அந்த மூன்று நபர்களில் ஒருவர் சிதம்பரம் வாத்தியார் என்று சொன்னால் சரிதான். மேற்படி மூன்று வீடுகளும் அந்த ஒரே தெருவில் தான் அமைந்துள்ளது. எனது வீட்டிற்கு எதிரே தான் எதிரி ரவிக்குமார் வீடு உள்ளதா எனக் கேட்டால் எனது வீட்டிற்கு மேற்கு புறம் ரவிக்குமார் வீடு உள்ளது. எனது வீட்டிற்கும் ரவிக்குமார் வீட்டிற்கும் இடையில் எனது கணவர் வைத்த ஒரு வேப்பமரம் உள்ளது. அந்த மரம் எங்களது அனுபவத்தில் தான் உள்ளது.

Sd/– மாரிகண்ணு

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.